**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.**

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், வைகாசித்திங்கள் 19 ம் நாள்

**E.P.No. 6/2024**

**in**

**O.S.No. 229/2012**

1. அன்னபூரணி
2. விஜயா
3. ராணி
4. லதா
5. ராசாத்தி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. ஆண்ட்ரூஸ் (இறந்துவிட்டார்)
2. சந்தோசம் (எ) பாப்பம்மாள் (இறந்துவிட்டார்)
3. சாந்தி
4. ஜார்ஜ்
5. சுபி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 08.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அங்குராஜ், B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள்

வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இ.ம.எண்.1073/2016 ல் 06.08.2022 ல் பிறப்புவித்த இறுதிநிலை தீர்ப்பாணைப்படி மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கி உத்தரவிடப்பட்ட இம்மனு சொத்து விபரத்தில் கண்ட சொத்தினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 35 ன்படி நோட்டீஸ் அனுப்பி சுவாதீனம் செய்து கொடுக்கும்படிக்கும் தவறினால் நீதிமன்ற அமீனா மூலம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு இம்மனுவில் குறிப்பிட்ட சொத்துக்களை சுவாதீனம் செய்து தர உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் ஆர்டர் 21 ரூல் II(2)ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டு கடந்த 16.09.2003 ம் தேதியன்று தாவா சொத்துக்களில் 1 வது அயிட்ட சொத்தை நலந்திகடு கலந்து 7 சம பாகங்களாக பிரித்து அதில் 6 தொடர்ச்சியான பாகங்களை வாதிகளுக்கு ஒதுக்கியும் 2 வது அயிட்ட சொத்தை நலந்திகடு கலந்து 7 சமபாகங்களாக பங்கி அதில் 5 தொடர்ச்சியான பாகங்களை வாதிகளுக்கு ஒதுக்கியும் தனி சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்றும் மேற்படி வீதம் பங்கிட நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டு முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ii) கடந்த 06.08.2022ம் தேதியன்று ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், ஆறுதொழுவு கிராம புலத்தில் புல எண்.121 வடபுற பாகம் பு.ஹெக்.1.36.00 (பு.ஏ.3.36) விஸ்தீரண பூமியை 7 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் ஒவ்வொரு பாகமும் 0.21.5 (பு.ஏ.0.53) வீதம் பு.ஏ.3.19 விஸ்தீரணம் உள்ள பூமி பிரிவினை செய்யப்பட்டது. மேற்படி பூமிக்கு மேல்புறம் தென்வடல் பொது தடம் அமைந்துள்ளது. வடபுறமாக கிழமேலாக தார் ரோடு அமைந்துள்ளது. தாவா பூமியின் அமைப்பு தென்வடலை விட கிழமேல் நீளம் அதிகமாக இருந்ததால் தென்வடலாக அத்து ஏற்படுத்தி 7 சம பாகங்களாக பிரிவினை செய்யப்பட்டு வட்ட சார் ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் வரைபடத்தில் பிளாட் எண்.2 முதல் 7 வரையான பச்சை பிளாட்கள் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கியும் 1ம் நெம்பர் ஊதா நிறத்தில் காட்டப்பட்டுள்ள பிளாட் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

iii) எனவே இ.ம.எண்.1073/2016ல் 06.08.2022ல் பிறப்புவித்த இறுதிநிலை தீர்ப்பாணைப்படி மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கி உத்தரவிடப்பட்ட இம்மனு சொத்து விபரத்தில் கண்ட சொத்தினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 35ன்படி நோட்டீஸ் அனுப்பி சுவாதீனம் செய்து கொடுக்கும்படிக்கும் தவறினால் நீதிமன்ற அமீனா மூலம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு இம்மனுவில் குறிப்பிட்ட சொத்துக்களை சுவாதீனம் செய்து தர உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2. 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 4, 5 எதிர்மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர்கள் மனு பொய்யானது, மோசடியானது, சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்.

ii) மனு 1, 2 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி தாவா தாக்கல் செய்ததில் தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் 16.09.2003ல் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் இல்லை. மேலும் மனுதாரர்கள் தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கின் அசல் வழக்கு எண் மற்றும் தரப்பினர்கள் குறித்த விபரம் எதுவும் குறிப்பிடாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

iii) மனுதாரர்கள் தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கின் அ.வ.எண்.320/1999 ஆகும். மேற்படி வழக்கில் மனுதாரர்களும் 1, 2 எதிர்மனுதாரர்களும் தரப்பினர்கள் ஆவார்கள். அ.வ.எண்.320/1999 வழக்கில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் இல்லை. மேற்படி அ.வ.எண்.320/1999 வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் 3 எதிர்மனுதாரரின் கணவர் மற்றும் 4, 5 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஆவார். 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் தாயார் ஆவார். மேற்படி அ.வ.எண்.320/1999 வழக்கில் கடந்த 16.09.2003ல் மேற்படி 1ம் எதிர்மனுதாரரும் 2ம் எதிர்மனுதாரரும் மேற்படி அ.வ.எண்.320/1999ல் தோன்றாத்தரப்பினராக இருந்து ஒரு தலைபட்ச தீர்ப்பின் பேரில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஆகும்.

iv) மேற்படி அ.வ.எண்.320/1999 ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஏற்பட்ட பிறகு ஆள்வரையின்படி இந்நீதிமன்றத்தில் மாறுதல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்பது தவறு. தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் கடந்த 16.09.2003 ல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஏற்பட்ட பிறகு உபய தரப்பினர்களுக்குள் சமரசம் ஏற்பட்டு மனு/தாவா அயிட்ட 2 சொத்து சொத்துக்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்துவிட்டனர். உண்மையில் மனு/தாவா 2 வது அயிட்ட சொத்து மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.320/1999 ல் சொத்துக்கள் மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று கூறியே தாவா தாக்கல் செய்திருந்தார்கள். மேற்படி சொத்து வேறு ஒரு நபருக்கு பாத்தியப்பட்டது என்ற உண்மையை மறைத்து தாக்கல் செய்து விட்டனர். உண்மை விபரம் தெரிந்து மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர்கள் தங்களுக்குள் சமரசம் பேசி மனு/தாவா 2 வது அயிட்ட சொத்தை விற்பனை செய்துவிட்டனர்.

v) அ.வ.எண்.320/1999 ல் 16.09.2003 ல் முதல்நிலை தீர்ப்பாணை பெற்ற பிறகு கடந்த 2009 ம் வருடம் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனுதாரர்கள் மனு செய்து மேற்படி மனு இ.ம.எண்.728/2009 மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி மனு நிலுவையில் இருக்கும்போது மேற்படி மனுவை மனுதாரர்கள் தரப்பில் Not Press செய்துவிட்டு மீண்டும் இ.ம.எண்.1075/2016 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்த இறுதிநிலை தீர்ப்பாணை மனுக்களில் 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் 1ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசுகள் என்ற நிலையில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மீது மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மேற்படி இ.ம.எண்.1075/2016 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

vi) மேற்படி அ.வ.எண்.320/1999 ல் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் நேரடியான தரப்பினர்கள் இல்லை. இந்நிலையில் முன்பு 1ம் எதிர்மனுதாரர் நடத்தி வந்த அ.வ.எண்.320/1999 ன் எதிர்வழக்குரையில் 1ம் எதிர்மனுதாரர் பெயருக்கு மனு/தாவா 1வது அயிட்ட சொத்துக்களை பொறுத்து ஒரு உயில்சாசனம் எழுதி வைத்திருந்த விபரத்தினை கூறியுள்ளார். மேற்படி உயில் சாசனத்தை அ.வ.எண்.320/1999 வழக்கில் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட சமரசத்தின் பேரில் மேற்படி வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டார். மேற்படி உயில் சாசனம் எங்கு உள்ளது என்ற விபரத்தை தெரிவிக்காமலே 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார். மேற்படி உயில்சாசனம் மனு/தாவா 1வது அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் பெயருக்கு ஏற்பட்ட உயில் சாசனம் ஆகும்.

vii) மேற்படி உயில்சாசனம் கடந்த 19.08.2022 ல் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. மேற்படி உயில்சாசனத்தைப் பொறுத்து 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கும் அ.வ.எண்.340/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மேற்படி காங்கயம் சார்பு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் பேரில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடு A.S.No.80/2025 தாராபுரம் மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி A.S.No.80/2025 வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளைக்காக மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே A.S.No.80/2025 மேல்முறையீடு வழக்கானது எதிர்மனுதாரர்களால் மாண்பமை தாராபுரம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நாளது வரை நிலுவையில் இருந்து

வருவதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்நிறைவேற்று மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, மனுதாரர் தரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரணைக்காக போதுமான வாய்ப்பு அளித்தும் முன்வராததால் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

**<u>5. தீர்வு:–</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 16.09.2003 ம் தேதியன்று முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கடந்த 06.08.2022 ம் தேதியன்று மனு சொத்துக்களை மனுதாரர்களுக்கு ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே இ.ம.எண்.1073/2016 ல் 06.08.2022 ல் பிறப்புவித்த இறுதிநிலை தீர்ப்பாணைப்படி மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கி உத்தரவிடப்பட்ட இம்மனு சொத்து விபரத்தில் கண்ட சொத்துக்களை மனுதாரர்களுக்கு சுவாதீனம் செய்து தர

உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அ.வ.எண்.320/1999ல் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் நேரடியான தரப்பினர்கள் இல்லை என்றும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.340/2022 என்ற வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் பேரில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடு A.S.No.80/2025 தாராபுரம் மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அ.வ.எண்.320/1999 என்ற வழக்கானது மாண்புமிகு தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு கடந்த 16.09.2003 அன்று தாவா சொத்துக்களில் 1வது அயிட்ட சொத்தை நலந்திகடு கலந்து 7 சம பாகங்களாக பிரித்து அதில் 6 தொடர்ச்சியான பாகங்களை வாதிகளுக்கு ஒதுக்கியும் 2வது அயிட்ட சொத்தை நலந்திகடு கலந்து 7 சமபாகங்களாக பங்கி அதில் 5 தொடர்ச்சியான பாகங்களை வாதிகளுக்கு ஒதுக்கியும் தனி சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்றும் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மாண்புமிகு தாராபுரம் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.320/1999 என்ற வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அ.வ.எண்.229/2012 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

7. பின்னிட்டு இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் இறுதிநிலை தீர்ப்பாணை பரிகாரம் கோரி இ.ம.எண்.1073/2016 என்ற மனுவானது தாக்கல்

செய்யப்பட்டு மேற்படி மனுவில் கடந்த 04.01.2018 ம் தேதியன்று நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, கடந்த 13.11.2019 ம் தேதியன்று நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 06.08.2022 ம் தேதியன்று ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், ஆறுதொழுவு கிராம புலத்தில் புல எண்.121 வடபுற பாகம் பு.ஹெக்.1.36.00 (பு.ஏ.3.36) விஸ்தீரண பூமியை 7 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் ஒவ்வொரு பாகமும் 0.21.5 (பு.ஏ.0.53) வீதம் பு.ஏ.3.19 விஸ்தீரணம் உள்ள பூமி பிரிவினை செய்யப்பட்டது என்றும் மேற்படி பூமிக்கு மேல்புறம் தென்வடல் பொது தடம் அமைந்துள்ளது என்றும் வடபுறமாக கிழமேலாக தார் ரோடு அமைந்துள்ளது என்றும் தாவா பூமியின் அமைப்பு தென்வடலை விட கிழமேல் நீளம் அதிகமாக இருந்ததால் தென்வடலாக அத்து ஏற்படுத்தி 7 சம பாகங்களாக பிரிவினை செய்யப்பட்டு வட்ட சார் ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் வரைபடத்தில் பிளாட் எண்.2 முதல் 7 வரையான பச்சை பிளாட்கள் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கியும் 1 ம் நெம்பர் ஊதா நிறத்தில் காட்டப்பட்டுள்ள பிளாட் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8. பின்னிட்டு மனுதாரர்கள்/வாதிகளால் இ.ம.எண்.1073/2016 ல் 06.08.2022 ல் பிறப்புவித்த இறுதிநிலை தீர்ப்பாணைப்படி மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கி உத்தரவிடப்பட்ட இம்மனு சொத்து விபரத்தில் கண்ட சொத்துக்களை சுவாதீனம் செய்து தர உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது இம்மனுவின் 3 ம் எதிர்மனுதாரர் மற்றும் அன்பழகன், ரஞ்சனி ஆகியோர்களால் இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராக மாண்புமிகு

காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.340/2022 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கானது கடந்த 18.01.2024ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

9. மேற்படி தீர்ப்பாணையின் பேரில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களால் A.S.No.80/2025 என்ற வழக்கானது மாண்பமை தாராபுரம் மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கானது நிலுவையில் இருந்து வருவதாக 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி A.S.No.80/2025 மேல்முறையீட்டு வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் தடை உத்தரவு எதுவும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை.

10. இவ்வழக்கின் இ.ம.எண்.1073/2016 என்ற இறுதிநிலை தீர்ப்பாணை உத்தரவில் மனு சொத்துக்களான வட்ட சார் ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் வரைபடத்தில் பிளாட் எண்.2 முதல் 7 வரையான பச்சை பிளாட்கள் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒதுக்கியும் 1ம் நெம்பர் ஊதா நிறத்தில் காட்டப்பட்டுள்ள பிளாட் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்கியும் உத்தரவிடப்பட்டு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணைப்படி நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் பச்சை நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 முதல் 7 வரையிலான பச்சை நிற பிளாட்களை மனுதாரர்கள்/வாதிகளுக்கு சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

11. மேலும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள மேல்முறையீட்டு வழக்கு எண்.80/2025 வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக பலமுறை வாய்ப்பளித்தும் மேற்படியார்கள் முன்வராததால் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். எதிர்மனுதார்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை.

12. எனவே மேலே கண்ட பரிசீலனைகளில் இருந்து தற்போது வரை அசல் வழக்கின் முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணைகள் அமுலில் உள்ள காரணத்தினாலும், இவ்வழக்கின் இறுதிநிலைத் தீர்ப்பாணைக்கான நடவடிக்கையானது, மேல்முறையீட்டில் நிறுத்தி(STAY) வைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்தவொரு வாதத்தையும் முன் வைத்திருக்காததாலும், அதுபோல் எந்தவொரு(STAY) உத்தரவும் இல்லாததாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கும், தரப்பினர்களின் நலனுக்கும் உகந்ததாயிருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13. எனவே மேலே கண்ட பரிசீலனைகளின்படியும், விவாதங்களின்படியும் மனுதாரர்கள்/வாதிகளால் அ.வ.எண்.320/1999 என்ற வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் கடந்த 16.09.2003 அன்று முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து இந்நீதிமன்றத்தால் கடந்த 06.08.2022 அன்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

தரப்பில் தாக்கல் செய்த இ.ம.எண்.1073/2016 ல் மனு சொத்துக்களைப் பொறுத்து இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளதன் அடிப்படையிலும், இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனு சொத்தான 13.11.2019 தேதியிட்ட அ.வ.எண்.229/2012 இ.ம.எண்.1073/2016 இறுதிநிலை தீர்ப்பாணையுடன் இணைக்கப்பட்டுள்ள வட்டசார் ஆய்வாளர், காங்கயம் அவர்களின் வரைபடத்தில் பச்சை நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிளாட் எண்.2 முதல் 7 வரையிலான பிளாட்களான க.ச.எண்.285 புல எண்.121/1 பு.ஹெக்.1.10.58 (பு.ஏ.2.73 சென்ட்) பூமியை மனுதாரர்கள்/வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்கவும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வட்டசார் ஆய்வாளர், காங்கயம் அவர்களின் வரைபடம் ஆகியவை இந்த உத்தரவின் ஒரு அங்கமாக பாவிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 15.06.2026. படி மெமோ செலுத்த ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 02 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.06.02 19:24:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :– இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :– இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.06.02 19:24:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.